(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 17.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 06, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுதுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் உள்ளிட்ட மொத்த அரச நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற பாதுகாப்புக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(iii) அவற்றுள் அரச கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மேற்படி ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் பாதுகாப்புச் சேவைக்காக தனியார் பாதுகாப்புக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்குவது தொடர்பான ஒப்பந்தங்களைப் பெறுகின்றபோது மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவை வழங்கும் செயற்பாட்டை அரசிற்குரிய பாதுகாப்புக் கம்பனிகளுக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

60/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் சட்டமாணி பட்டப்படிப்பை வழங்கும் அரச பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மேற்படி பல்கலைக்கழகங்களில் சட்டமாணி பட்டப்படிப்பை பூர்த்திசெய்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) வேறு சில பல்கலைக்கழகங்களிலும் சட்ட பீடங்களை நிறுவி சட்டக்கல்வியை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

80/2024

கௌரவ ரோஹண பண்டார,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலய அலுவலகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்திலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் இணைவதற்கு பூர்த்தி செய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தத் தகைமைகளை பூர்த்தி செய்யாமல், தற்போது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலய அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பணிபுரியும் இடம் மற்றும் பதவி வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) அந்த ஊழியர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்து முறையான தகைமையுள்ள ஊழியர்களை வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலய அலுவலகங்களில் பணிபுரிவதற்கு அனுப்புவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

88/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மனித – யானை மோதல் காரணமாக உயிரிழந்துள்ள மனிதர்களினதும் யானைகளினதும் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் வனசீவராசிகள் வலயத்துக்கும் ஏற்ப தனித்தனியாக யாது;

(ii) மனித-யானை மோதலுக்கு நிரந்தர தீர்வினை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

102/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் நாட்டரிசி மற்றும் சம்பா அரிசி கிலோகிராமொன்றின் சந்தை விலை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அரிசி விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்விலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுகர்வோருக்கு தட்டுப்பாடின்றி அரிசியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்து அரிசி கையிருப்பை பேணிச் செல்லுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கையிருப்புத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி இறக்குமதி தொடர்பான வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

110/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் தற்போது தொழிற்படும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கைத்தொழிற்சாலைகளிலும் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) புதிய கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள முதலீட்டாளர்கள் உள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

252/2024

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் ஒரு கைத்தொழில் என்ற வகையில் இறால் வளர்ப்பு இன்றளவில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்பதையும்;

(ii) புத்தளம் மாவட்ட மக்களுக்கு குறித்த கைத்தொழில் மூலம் பாரிய பொருளாதார பலம் கிடைத்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

297/2024

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் வைத்தியர் திரு. அனில் ஜாசிங்கவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) அவர் தொடர்பாக அரசாங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) திரு. ஜாசிங்க சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படும் தருணத்தில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசாரணை நிறைவடைந்திருந்ததா;

(iv) மேற்படி விசாரணையில் திரு. ஜாசிங்க நிரபராதியாக காணப்பட்டுள்ளாரா;

(v) திரு. ஜாசிங்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகையில் ரூ. 29 இலட்சம் தொடர்பாக கணக்காய்வு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

365/2024

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு, மே மாதம் பாதுகாப்பு அமைச்சின் அப்போதைய செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ், பாதுகாப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவை தவிர்ந்த ஏனைய இஸ்லாமிய மத நூல்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தித் தடை விதிக்கப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த வருடத்திலும் கூட, இத்தடை காரணமாகப் புனித குர்ஆனின் இறக்குமதி செய்யப்பட்ட பிரதிகளை விடுவிப்பதில் பல மாத கால தாமதம் ஏற்பட்டது என்பதையும்;

(iii) இஸ்லாமிய மதப் புத்தகங்களை விடுவிப்பதில் ஏற்பட்ட நீண்ட தாமதத்தின் மூலம் பாரபட்சமிகு இத்தடையானது இஸ்லாமிய நூல்களை இறக்குமதி செய்வோருக்குக் கடுமையான சிரமங்களை ஏற்படுத்தியது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட தடையினை/கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு/நீக்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(1) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2025 பெப்ரவரி 17 ஆம் திகதி, திங்கட்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(4) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், 2025 பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19 ஆம் திகதி புதன்கிழமை, 20 ஆம் திகதி வியாழக்கிழமை, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 22 ஆம் திகதி சனிக்கிழமை, 24 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2025) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2025) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2025 பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 20 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும், 22 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2025) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 4),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2025) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட தினமாகிய 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர அவர்கள் 2025 ஜனவரி 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 160அ, 161ஆ, 161இ, 161ஈ, 161உ, 161ஊ, 161எ, 161ஐ, 161ஒ மற்றும் 161 ஔ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 204 ஆம் பிரிவின் கீழ் அப்போதைய வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 2407/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.